எம்.ஏ.தமிழ் இரண்டாமியாண்டு(2020-2021)
தாள் XII
CODE : MTA34

கூறு 1 - உரை பொதுவிளக்கம்

# உரையியல்



# உரை வரையறை

மூல நூலின் பொருளை விளக்கி உரைப்பது உரை என்று கூறலாம். இங்கு "உரை என்பது இருவகைப் பொருளில் ஆளப்படுகிறது. ஒன்று பாட்டுக்குக் கூறப்படும் கருத்து. மற்றொன்று அடி வரையறைக்கு உட்படாது தொடர்ந்து நடப்பது. ஆயின் காலப்போக்கில் உரை என்பது ஒரு பொருளையும் (Commentary), உரைநடை என்பது மற்றொரு பொருளையும் (Prose) குறிக்கத் தொடங்கின" என்பர் நா.செயராமன்.

உரைக்கப் பெறுவதனால் உரையாயிற்று, 'குன்றம் குமுறிய உரை' எனும் பரிபாடலில் 'உரை' என்பது 'முழக்கம்'; என்ற பொருளில் வருகின்றது. 'உரைத்தான்' என்ற வினை முற்றிலுள்ள உரை என்ற பகுதி கூறு' என்ற பொருளில் வருகின்றது. உரை என்ற வேர்ச்சொல் ஒலித்தல், கூறுதல், பேசுதல் போன்ற பொருள்களில் வருகின்றது" என்பர் அ.மு.பரமசிவானந்தம்.

# உரை விளக்கம்

**வாழ்வியற் களஞ்சியம் உரை விளக்கம**

உரை என்பதற்கு பல்வேறு விளக்கங்கள் எழுந்துள்ளன. ஊரை என்னும் சொல் பல்வேறு பொருள்களைக் கொண்டு விளங்குகின்றது. பொதுவாக உரை என்பது பொருளின் தன்மையை உள்ளவாறு உரைப்பதாகும். இதனை ஒரு சான்றினால் விளக்கலாம். தட்டான் பொன்னுக்கு உரை காணும் வழக்கம் பல கட்டுப்பாடுகளுக்கிடையில், நாட்டில் இன்றும் உள்ளது. பொன் சிறந்ததா, இல்லையா என்பதை உண்மை நிலை, பண்பு, தரம் முதலியன இன்ன வகையன என்பதை உரைத்துக் காண்பது நாடறிந்த ஒன்று. அதன் தன்மையை உணர்த்தும் கல் ‘உரை கல்’ எனப்படும். எனவே பொருளின் இயல்பை உள்ளது உள்ளவாறே உலகுக்கு உணர்த்துவது உரையாகும்”;என்கிறது வாழ்வியற் களஞ்சியம். இவற்றில் இருந்து மூல நூல்களின் பொருளை அறிந்து கொள்ள எழுதப்பட்டதே உரை என்றும், உரைக்கப் பட்டதனால் உரையாயிற்று என்றும், உரை என்பது பொருளின் தன்மையை மாறாமல் உரைப்பது என்றும், உரைக்கு பல கருத்துக்கள் இருந்ததைப் பற்றி அறியமுடிகிறது.

உரைத்தான் என்பதற்குச் 'சொன்னான்' என்பது பொருள். ஆகவே உரை என்பதற்குச் 'சொல்' என்றே பொருள் கூறலாம். இது ஆகுபெயராய் சொல்லின் பொருளைக் குறித்து வழங்குகிறது. புலமை மிக்கவர் இயற்றும் நூலைப் பொதுமக்களும் உணர்தல் வேண்டின் அதற்கு விளக்கம் வேண்டியுள்ளது. அவ்விளக்கமே உரை எனப்படுகிறது எனத் 'தமிழ்க் கலைக்களஞ்சியம்' கூறுகிறது.[2] உரை என்பதற்கு உரைத்தல், சொல்லுதல் என்பதே முதன்மைப் பொருளாக இருப்பதாலும், அக்காலத்தில் கற்றறிந்த ஆசான் ஒருவர் ஒரு நூற்பாவினை அல்லது நூலினைப் பிறருக்கு வாய்வழி விளக்கிக் கூறுதலாலும் இது உரைத்தலாகக் குறிக்கப்பட்டது. அதனால் ஒன்றை நேரடியாக விளக்கிக் கூறுதலே உரையாகக் கருதப்பட்டுப் பின்னர் விளக்கிக் கூறுதல் எழுத்து வடிவில் இடம்பெற்ற போது அதுவும் உரை எனும் வகைமையுள் அடங்கிப் போயிருக்க வேண்டும்.

ஒரு நூற்பாவோ, ஒரு செய்யுளோ, ஒரு நூலோ விளங்காதவிடத்து அவற்றைத் தெளிவுபடுத்தும் நோக்கில் எழுந்த விளக்கங்களே 'உரை' எனப்பட்டது. ஒன்றை விளங்க வைத்தல் உரையாகும். 'உரைக்கப்படுவதனால் உரையாயிற்று என்று 'உரை' என்ற சொல்லுக்கு விளக்கம் தருகிறார் அ.மு. பரமசிவானந்தம்.'[1] உரை என்ற வேர்ச்சொல் ஒலித்தல், கூறுதல், பேசுதல் போன்ற பொருளில் கையாளப்படுகிறது.

ஒரு காலத்தில் உரைகள் அல்லது உரை நூல்களே தேவையில்லை என்ற நிலை இருந்திருக்க வேண்டும் என்ற இக்கருத்தினைப் பேராசிரியர் தொல்காப்பிய மரபியல் உரையில் 'உரையின்றி சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டு என்று குறிப்பிடுகிறார்.[3] பல நூல்கள் உரையின்றிப் படைக்கப்பட்டிருப்பதும் இதற்குச் சான்றாகும்.

உரை என்பதற்குப் பல்வேறு உரையாசிரியர்களும் பல்வேறு விதமாகத் தங்களின் கருத்துகளைக் கூறியுள்ளனர்.

''சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றியமையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரை எனப்படுமே ''[4]

என்ற நூற்பா, உரை என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தும். மேலும் மூலநூலில் கூறப்பட்டுள்ள உட்பொருளேயன்றி ஒருதலையாக அதற்கு இன்றியமையாது பொருந்துவனவற்றையெல்லாம் அவ்வப்பொருளோடு கூட்டிச் சொல்லுதல் உரை எனப்படும் என்று ச. பாலசுந்தரம் கூறுகிறார்.[5]

உரை கூறும் முறையினை அடிப்படையாக வைத்து உரை என்பது கருத்துரைத்தலும், கண்ணழித்தலும், பொழிப்புத்திரட்டலும், அகலங்கூறலும் என நான்கு வகையாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு நூற்பாவில் கூறப்பட்டுள்ள செய்தியை மட்டும் கூறுதல், ஒரு நூற்பாவிலுள்ள சொற்களுக்குத் தனித்தனியே பொருள் கூறி அதன்வழி நூற்பாவினை விளங்க வைத்தல், ஒவ்வொரு சொல்லுக்கும் அதற்குரிய பல்வேறு பொருள்களை விரித்துக் கூறிப் பின்னர் நூற்பாவிற்குரிய சரியான பொருளை உணர்த்தி நூற்பாவின் பொருளைத் தொகுத்துக் கூறுதல், நூற்பாவின் கருத்தினை விளக்கி அது பற்றிய வன்மை மென்மைகளை ஆராய்ந்துரைத்தல் என வகைப் படுத்தப்பட்டுள்ளது. இந்த வகைப்பாட்டிலுள்ள இறுதி மூன்றும் ஒன்றின் வளர்ச்சி நிலையில் அமைந்த மற்றொன்றாகப் பரிணாம வளர்ச்சி பெற்ற அடுக்கு நிலைகளாகக் கருத வாய்ப்புள்ளது.

தொகுத்துக் கண்ணழித்தல், விரித்துக் கொணர்ந்து உரைத்தல் என்னும் இருகூறும், பொழிப்பு, அகலம், நுட்பம் என்னும் மூவகையும், எடுத்துக்கோடல், பதங்காட்டல், பதம் விரித்தல், பதப்பொருள் உரைத்தல், வினாதல், விடுத்தல் என்னும் அறுகூறும், பொழிப்பு, அகலம், நுட்பம், நூல் எச்சம், பதப்பொருள் உரைத்தல், ஏற்புழிக்கோடல், எண்ணல் எனும் ஏழு கூறுகளும், சொல்லே, சொல்வகை, சொற்பொருள், சோதனை. மறைநிலை, இலேசு, எச்சம், நோக்கே, துணிவே, கருத்து செலுத்துதல் என்னும் ஈரைந்து கிளவியும், சூத்திரம் தோற்றம், சொல் வகுத்தல், சொற்பொருள் உரைத்தல், வினாதல், விடுத்தல், விசேடங் காட்டல், உதாரணங் காட்டல், ஆசிரிய வசனம் காட்டல், அதிகார வரம்பு காட்டல், தொகுத்து முடித்தல், விரித்துக் காட்டல், துணிவு கூறல், பயனொடு புணர்தல் என்னும் இப்பதின் மூன்றையும் உரை கூறும் முறைகள் எனப் ‘பாடம் கருத்தே’ என்னும் நூற்பாவிற்கு விளக்கமாகக் கூறுகிறார் மயிலைநாதர்.[8]

தமிழிலக்கிய வரலாற்றில் உரையாசிரியர்கள் மூல நூலாசிரியர்களுக்கு இணையாகப் போற்றப்படுகின்றனர். சான்றாக 'மகத்துவம் வாய்ந்த அகத்தியன்', 'ஒல்காப் புலமைத் தொல்காப்பியன்'. 'தெய்வப் புலவன் திருவள்ளுவன்', பல்கலைக்குரிசில் பவணந்தி' என்பது போல 'உளங்கூர் கேள்வி இளம்பூரணர்'. ஆனாப் பெருமைச் சேனாவரையர்', 'உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் ' எனவரும் சிறப்புப் பெயர்களால் நன்கு உணரலாம். இவர்களது உரைகள் மூலநூல்கள் போலவே இருந்தன. இதன் காரணமாக இவ்வுரை நூல்கள் 'உரை மூலங்கள்' என்றே அழைக்கப்பட்டன என வ.சுப. மாணிக்கம் கூறுகிறார்.[9]

இன்றுங்கூட தொல்காப்பிய மூலநூலை விட இளம்பூரணம், நச்சினார்க்கினியம் எனக் குறிப்பிட்ட உரையை முதன்மைப் படுத்தி மூல நூலான தொல்காப்பியத்தைக் கற்பது தொடர்கிறது.

உரைகளைப் பற்றிய ஆய்வு முயற்சிகள் 19-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது. தமிழிலக்கிய வரலாற்றில் இடைக்காலத்தை 'உரையாசிரியர்களின் காலம்' என்று கூறுவதுண்டு. இவ்வுரைகள் இல்லையென்றால், பழம்பெரும் இலக்கிய, இலக்கணங்களையெல்லாம் படித்து, விளங்கிக் கொண்டிருக்க முடியாது. மூல நூல்களைப் போலவே உரை நூல்களுக்கும் எல்லாச் சிறப்புக் கூறுகளும் உள்ளன. மூலங்களா, உரைகளா என்று வியக்கும் வகையில், உரைநூல்கள் நூல் இயற்றிய ஆசிரியர் கருத்துக்களையும், நயங்களையும், சிந்தனை வளத்தையும் பெற்றுத் திகழ்கின்றன.[10] மேலும் உரைகளினால் எழும் பயன்பாடுகளை இங்கே சுட்டலாம்.

உரையாசிரியர்கள் சில பாடல்களுக்கு மிக விரிவான உரையும் நயமிக்க விளக்கமும் எழுதியிருப்பதால் இலக்கிய இலக்கண நூல்கள் பிற்காலத்தவரால் போற்றப்படுகின்றன. காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள தமிழ் உரைநடையின் இயல்பு, தனித்தன்மை ஆகியவற்றை உரைகளே நமக்கு உணர்த்துகின்றன. மொழியின் அமைப்பு, மக்களின் வாழ்க்கை நிலை, அரசியல், பழக்கவழக்கம் ஆகியவற்றையும் உரைகளே உணர்த்துகின்றன. இலக்கியச் சுவை மிகுந்த பாடல்களை அறிந்து கொள்ளவும் உரைகள் உதவுகின்றன.

உரை எழுதும்போது விளக்கத்திற்காகவும் சான்றுகளுக்காகவும் பிற நூல்கள் பலவற்றை உரையாசிரியர்கள் சுட்டிக் காட்டுவதுண்டு. சான்றாக சிலப்பதிகாரத்திற்கான அடியார்க்குநல்லாரின் உரையில் 'நாடக நூல்கள்' பல அக்காலத்தில் இருந்தன என்பதையும் தற்போது அவை கிடைக்காது போயுள்ள நிலையையும் அறியலாம்.

உரையைக் கொண்டு மூலத்தையும், மூலத்தைக்கொண்டு உரையையும் அறிந்து கொண்டதுண்டு. மறைந்து போன தமிழ் நூல்களின் பெயர், அவற்றை இயற்றிய புலவர்களின் வரலாறு ஆகியவற்றைக் காலங்கடந்து போற்றிக் காத்து வருபவை உரைகளேயாகும்.

தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியரான இளம்பூரணரின் நடை எளிமை வாய்ந்தது. சேனாவரையரின் இலக்கண உரைநடை பொலிவும் புனைவும் மிக்கது. பேராசிரியர் நடை பெருமிதமானது. நச்சினார்க்கினியர் ஆரவாரமற்ற கருத்து நடையில் எழுதுகிறார் என்று மு.வை. அரவிந்தன் கூறியுள்ளார். இதனால் ஒவ்வொரு உரையாசிரியரும் தமக்கெனத் தனி நடையில் உரை அமைத்தனர். அத்துடன் மூல நூல்களின் தன்மைக்கு ஏற்பவும் அவை இலக்கிய நூலா, இலக்கண நூலா என்பதற்கு ஏற்பவும் உரைகள் எழுதும் பாங்கு வேறுபட்டு அமைந்துள்ளது.

இலக்கண உரையாசிரியர்களின் விளக்கங்களும் விவாதங்களும் புதிய இலக்கண நூல்கள் தோன்றாத குறையை ஓரளவு நிறைவு செய்தன என்று கூடச் சொல்லலாம். பின்னர் தோன்றிய நூலாசிரியர்களுக்கு இவ்வுரைகள் மூலநூல்கள்ஆயின. தொல்காப்பியருக்குப் பின் மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் இலக்கணத்தில் ஏற்பட்ட வேறுபாடுகள் போன்றவை தொல்காப்பிய நூற்பாக்களுக்குப் பொருளை அறிந்து கொள்வதில் பிற்காலத்தவருக்குச் சிறிது இடர்ப்பாடுகளை உண்டாக்கின.

இந்த இடர்ப்பாட்டைக் களையும் வகையிலும் தொல்காப்பிய நூற்பாக்களின் பொருளைத் தெளிவுபடுத்தும் முறையிலும், அதில் கூறப்பட்டுள்ள இலக்கணக் கூறுகளை இலக்கிய மேற்கோள்களைக் கொண்டு விளக்கும் நோக்கிலும் உரைகள் தோன்றின.

நூல்களை அரங்கேற்றி குற்றம் குறைகளை ஆராய்ந்து மதிப்பிட்டது போலவே உரைகளையும் அரங்கேற்றி குற்றம் குறைகளை ஆராய்ந்து மதிப்பிடும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், நைடதம் முதலான நூல்களுக்கு அரங்கேற்றம் நிகழ்ந்ததாகக் குறிப்பு உள்ளது என இரா. மோகன் குறிப்பிடுகிறார். சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய முதல் உரை சமணப் பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்றும் சமண மரபுகளையும் மெய்ம்மைகளையும் நன்கு ஆராய்ந்து அறிந்து பின் அவர் எழுதிய இரண்டாவது உரையே ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றும் அறியலாம். அது போன்றே இறையனார் அகப்பொருள் உரைநூல் அரங்கேற்றமான செய்தியும் நாம் அறிவோம்.

# வாய்மொழி உரை

பண்டைக் காலத்தில் எழுது கருவிகளும், எழுதும் முறைகளும் விரைவாக எழுதுவதற்குத் தடையாக இருந்தன. பனையோலைகளில் எழுத்தாணி கொண்டு ஒரு நூலைப் பல நாள்கள் எழுதிச் சேர்த்துச் சுவடியாக்கிப் போற்றிக் காக்க வேண்டிய நிலை இருந்து வந்தது. ஒரே சுவடியை ஒருவர் படிக்க மற்றவர்கள் காதால் கேட்டு அறிந்தனர். மிகுதியாக எழுதி விளக்க வேண்டியவற்றை எழுதாமல், வாயால் கூறியே விளக்கி வந்தனர். 'விரிப்பின் பெருகும்,' விரிவஞ்சி விடுத்தாம்,' 'வல்லார் வாய்க்கேட்டுணர்க'. 'வந்தவழிக் கண்டு கொள்க ' என்று உரையாசிரியர்கள் இடையிடையே எழுதிச் செல்லும் வழக்கம் அக்காலத்தில் உரை எழுதுவதில் இருந்த இடர்ப்பாடுகளை நன்கு உணர்த்துகின்றன.[14] காலங்காலமாய்த் தமிழ்மொழியின் இலக்கிய வாழ்விற்கும் வெற்றிக்கும் காரணமாய் இருந்தவர்கள் உரையாசிரியர்களே எனும் அளவிற்கு இலக்கணக் கொள்கைகளையும், இலக்கியக் கருத்துகளையும் விரிவாக விளக்கியவர்கள் உரையாசிரியர்களேயாவர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கிய இலக்கணங்களிலுள்ள அரிய கருத்துகளையெல்லாம் தெரிந்து கொள்ள உரைகள் பெருந்துணை புரிகின்றன எனில் மிகையாகாது. ஒரு பாட்டுக்கு உரை என்ற நிலையில் முதலில் உரைகள் தோன்றின. ஒரு நூலுக்கு உரை எழுத முயன்றவர்கள் முதலில் அருஞ்சொற்களுக்குப் பொருள் எழுதவும், பிறகு அரும்பத உரை எழுதவும் தொடங்கினர். உரையாசிரியர்கள் என்று போற்றப்படும் முன்னோரெல்லாம் பாடம் சொல்லிய வகுப்பாசிரியர்களே என வ.சுப. மாணிக்கம் கூறுவார். ஏனெனில் உரையாசிரியர்கள் தம் உரை விளக்கங்களுக்கிடையே 'என்னையெனின்', 'என்னுதலிற்றோவெனின்', 'என்ன பெயர்த்தோ வெனின்', 'வல்லார் வாய்க் கேட்டுணர்க' என்பன போன்ற தொடர்களைப் பயன்படுத்துவதின் மூலம் உரையாசிரியர்களெல்லாம் வகுப்பாசிரியர்களே எனக் கருத இடமுண்டு என்று வ. சுப. மாணிக்கம் கூறுகிறார்.[16]

சிலசமயம் நூலுக்கு உரை எழுதத் தொடங்கும் முன் உரையாசிரியர்கள் நூலைப் பற்றிய பொதுவான செய்திகளைத் தொகுத்துக் கூறினர். நூலை உரைக்கும் ஆசிரியர் இயல்பு , நூல் கேட்கும் மாணவர் இயல்பு, பாடம் சொல்லும் முறை, பாடம் கேட்கும் முறை ஆகியவற்றையும், நூலின் வரலாறு, ஆசிரியர் வரலாறு ஆகியவற்றையும் விளக்கமாகக் கூறிய பின் நூலுக்கு உரை எழுதத் தொடங்கினர். இவற்றோடு உரையின் வகைகளையும், அவற்றின் இயல்புகளையும் விளக்கினர். உரையாசிரியர்கள் முதலில் இயற்றியவை 'உரைச் சூத்திரங்கள்' எனப்பட்டன. பின்னர் உரையாசிரியர்களையும், உரைகளையும் சிறப்பிக்கும் வகையில் எழுதப்பட்ட பாயிரம் 'உரைச் சிறப்புப் பாயிரம்' என அழைக்கப்பட்டது. நூல் கூறும் பொருளைத் திரட்டிச் சொல்வது நூற்பாயிரம் அல்லது 'பதிகம்' என வழங்கப்பட்டது.[15] இவ்வாறாக நாளடைவில் உரை கூறும் முறைகள் விரிவடைந்து செறிவுற்று வளரத் தொடங்கின.

# செய்யுள் வடிவ உரைகள்

‘ஒரு செய்யுள் வடிவ நூலுக்கு வசன நடையில் உரை இயற்றுவதோடு செய்யுள் வடிவத்திலேயே உரை இயற்றுவது உண்டு. இது வடமொழியில் நடைபெறும் பெருவழக்காகும் என்று உ.வே.சாமி நாதய்யர் செய்யுள் வடிவில் தோன்றிய உரைகளைப் பற்றிக் கூறியுள்ளார்.[18]

‘தேவாரப் பதிகங்களில் பாசுரம் சிலவற்றிற்குப் பெரிய புராணத்தில் சேக்கிழார் உரை விரித்துச் சொல்கின்றார். இதைப்போலவே திருக்குறளுக்கும் செய்யுள் வடிவத்தில் உரையுண்டு, தனியே குறளுரை என்னும் பெயர் பெறாவிட்டாலும் அவை உரைகளின் தன்மையை உடையனவே என்று கூறுகிறார். உ.வே.சாமிநாதய்யர்.[19]

அகநானூற்றுக்கும் பழங்காலத்தில் அகவற்பாக்களால் ஆன உரை ஒன்று இருந்தது எனும் செய்தியினை ‘‘இத்தொகைக்குக் கருத்து அகவல்பாவால்பாடினான் இடையன நாட்டு மணக்குடியான் பால்வண்ண தேவனான வில்லவதரையன்’’

என்று உரை சிறப்புப்பாயிரம் கூறுவதிலிருந்து உணரலாம் என மு.வை அரவிந்தன் ‘உரையாசிரியர்கள்’ எனும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[20]

செய்யுள் வடிவில் எழுந்த மூலநூலுக்குச் செய்யுள் நடையிலேயே உரை எழுதும் போக்கினைக் கடின செய்யுள் நடைக்கு எளிய செய்யுள் நடையில் விளக்கம் என்றே கருத வேண்டும்.

'தமிழ் உரைநடை வரலாறு' தொன்மையும், சிறப்பும் வாய்ந்தது. செய்யுளுக்கு இடையிடையே எழுதிய உரைகள் அல்லாமல்,தனியாக உரைநடையில் எழுந்த நூல்கள் சில உள்ளன. ஸ்ரீ புராணம் போன்றவை மணிப்பிரவாள நடையில் எழுந்த உரைநடை நூலாகும். செய்யுளுக்கு உரிய சிறப்புகள் யாவும் உரைநடைக்கும் உண்டு.


உரைநடை எழுதுவோர், கேட்போர் செவிக்கு இனிமையும், தெளிவும் உள்ள சொற்களைக் கூற வேண்டும். உரையாசிரியர்களின் நடைபல்வேறு வகைகளாக உள்ளன. ஒவ்வொருவரும் தமக்கென்று சில இயல்களையும், சிலவரம்புகளையும் ஏற்படுத்திக் கொண்டு தத்தம் தனிச் சிறப்புகளை நிலை நாட்டிச் சென்றுள்ளனர். பழங்கால உரையாசிரியர்களின் நடை எல்லோருக்கும் விளங்கும் வகையில் அமையவில்லை. எனவே நடை என்பது எழுதுபவர்கள் திறமைக்கும், புலமைக்கும் ஏற்றவாறும் வேறுபடும். கருத்திற்கும் பொருளிற்கும் தக்கவாறும் வேறுபடும்.

உரையாசிரியர்களின் பல்வேறு வகையான உரைநடைகளைக் குறித்து மு. வரதராசனார் 'உரையாசிரியர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நடை அமைந்தது. அவர்தம் உரைகளும் ஒவ்வொரு வகையில் சிறப்புடையனவாக உள்ளன' என்று கூறுகிறார்.[21]

# உரைவகைகள்

படைப்பிலக்கியத்திற்கான உரைகளும், இலக்கணத்திற்கான உரைகளும், அவற்றின் அமைப்பு முறைகளில் வேறுபட்டவை. இலக்கண உரைகள் நூற்பாவிற்கு உள்ளதை உள்ளவாறே விளக்கம் கூறி, சான்றுகள் காட்டி அறிவார்ந்த நிலையில் அமைந்திருக்கும். படைப்பிலக்கியத்திற்கான உரைகள் நூற்பாவின் இலக்கிய நயத்தை மேம்படுத்திடச் சுவையுணர்வுடனும், கற்பனை கலந்தும் உயர்வு நவிற்சியுடனும் பாராட்டும் முறையால் அமைந்திருக்கும், அத்துடன் இலக்கண உரையாசிரியர்களின் நூல் உரையாசிரியர் பெயரால் முதன்மைபெறும். ஆனால் இலக்கிய உரையாசிரியர்களின் உரை நூல்கள் மீண்டும் இலக்கிய நூலாலேயே குறிக்கப்படும்.

சான்றாக, இளம்பூரணம், நச்சினார்க்கினியம் என்பன தொல்காப்பியத்திற்கான உரைநூல்கள் ஆகும். அதுபோல சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரை நூலினை அடியார்க்கு நல்லாரியம் என்றோ, திருக்குறளுக்கு பரிமேலழகர் எழுதியுள்ள உரை நூலினை பரிமேலழகரியம் என்றோ கூறுவதில்லை.


உரைகள்
இலக்கிய உரைகள்
இலக்கணஉரைகள்
செய்யுள்உரைகள்
சங்க இலக்கிய உரைகள்
காப்பிய உரை
அற இலக்கிய உரைகள
சமய உரை
இலக்கியம்
இலக்கணம்
சைவஉரைகள்
வைணவ உரைகள
பழையஇலக்கண உரைகள்
புதியஇலக்கண உரைகள்
இறையனார் களவியல் உரை
தொல்காப்பிய உரை
பழைய உரைகள்
புதிய உரைகள்

# இலக்கிய உரைகள்;

இலக்கிய உரைகளை நான்கு நிலைகளில் வைத்து நோக்கலாம். சங்க இலக்கிய உரைகள், காப்பிய உரைகள், அற இலக்கிய உரைகள், சமய உரைகள் என்பன அவை. சங்க இலக்கிய உரைகள் பத்துப்பாட்டு உரைகளும், எட்டுத்தொகை உரைகளும் ஆகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான திருக்குறள், நாலடியார் ஆகியவற்றின் உரைகள் அறஇலக்கிய உரைகளாகக் கருதப்படுகின்றன. சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காப்பியங்களுக்கு எழுதப்பட்ட உரைகள் காப்பிய உரைகளாகும்.

சமய உரைகள் சைவச் சமய உரைகள் என்றும் வைணவ சமய உரைகள் என்றும் இரண்டு நிலைகளில் காணப்படுகின்றன. இவற்றிற்கு நாலாயிரத் திவ்ய பிரபந்த உரைகளும், சைவத்திருமுறை மற்றும் சைவ சித்தாந்த உரைகளும் எடுத்துக்காட்டுகளாகும்.

இலக்கியத்திற்கு எழுதப்பட்ட உரைகள் இலக்கியத்தைப் போலவே எல்லாச் சிறப்புக் கூறுகளையும் பெற்று விளங்குகின்றன. கற்பனைச் சிறப்பு வாய்ந்த உவமைகளும், இலக்கியச் சுவை மிகுந்த பகுதிகளும், எதுகை மோனைகளும் ஓசையின்பம் தருகின்ற அழகிய நடையும் உரை முழுவதும் பயின்று வரலாம். ஒரு சில இடங்களை நோக்கும்போது நூலாசிரியர் இத்தகைய நுண்ணுணர்வுடன் பாடினாரா அல்லது உரையாசிரியர்கள் எழுதிய உரையின் மேன்மையா எனும்

| வ.எண் | நூலின் பெயர் | ஆசிரியர் பெயர் | உரையாசிரியர்கள் |
|---|---|---|---|
| 1. | பத்துப்பாட்டு (முழுவதும்) | சங்கப்புலவர்கள் | நச்சினார்க்கினியர், வை.மு.கோபாலகிரு'ணமாச்சாரியார், வே.சோமசுந்தரனார், ஐயம் பெருமாள், ந.சி.கந்தையா பிள்ளை, ம.இராசமாணிக்கனார் |
| 2. | திருமுருகாற்றுப்படை | நக்கீரர் | பரிமேலழகர், உரையாசிரியர், வே.ரா.தெய்வசிகாமணி, கவிப்பெருமாள், பரிதி, திருத்தணிகை சரவணப் பெருமாள் ஐயர், ஆறுமுகநாவலர், சு.அருள்அம்பலவாணர், எஸ்.வையாபுரிப்பிள்ளை, இரா.இராதாகிரு'ணன், எம்.ஆறுமுகம் பிள்ளை, புலியூர்க் கேசிகன் |

| | | | |
|---|---|---|---|
| 3. | பொருநராற்றுப்படை | | வா.மகாதேவமுதலியார்<br>கா.ஸ்ரீ.கோபாலாச்சாரியார் |
| 4. | சிறுபாணாற்றுப்படை | | மு.வை.அரவிந்தன் (திறனாய்வு) |
| 5. | பெரும்பாணாற்றுப்படை | | அருள் அம்பலவாணர்<br>இரா.இராகவய்யங்கார் |
| 6. | முல்லைப்பாட்டு | | மறைமலை அடிகள் |
| 7. | நற்றிணை | சங்கப்புலவர்கள் | பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்,<br>ஔவை சு.துரைசாமிப்பிள்ளை |
| 8. | குறுந்தொகை | சங்கப்புலவர்கள் | பேராசிரியர்(380 பாடல்கள்)<br>நச்சினார்க்கினியர், சௌரிப்பெருமாள் அரங்கன், டாக்டர் உ.வே.சாமிநாதஐயர், பொ.வே.சோமசுந்தரனார், இராகவவையங்கார்(112பாடல்கள்) |
| 9. | ஐங்குறுநூறு | சங்கப்புலவர்கள் | உ.வே.சா,<br>ஔவை சு.துரைசாமிப்பிள்ளை,<br>பொ.வே.சோமசுந்தரனார் |
| 10. | பதிற்றுப்பத்து | சங்கப்புலவர்கள் | உ.வே.சா,<br>ஔவை சு.துரைசாமிப்பிள்ளை,<br>அருள் அம்பலவாணர். |
| 11. | அகநானூறு | சங்கப்புலவர்கள் | பால்வண்ணத்தேவர்<br>இராகவஐய்யங்கார்<br>இராசகோபால் ஐயர்<br>ந.மு.வேங்கடசாமி நாட்டார்<br>இரா.வேங்கடாசலம்பிள்ளை |
| 12. | புறநானூறு | சங்கப்புலவர்கள் | உ.வே.சா<br>ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை |
| 13 | பரிபாடல் | சங்கப்புலவர்கள் | பரிமேலழகர் |
| 14. | கலித்தொகை | சங்கப்புலவர்கள் | நச்சினார்க்கினியர் |

அளவிற்கு இலக்கிய உரைகள் பேருதவி புரிந்தன. சிற்சில சமயங்களில் இலக்கண உரையாசிரியர்கள் தம் இலக்கியப் புலமைகளை வெளிக்காட்டும் வண்ணம் சான்று காட்டும் இடத்தில் பாடலொன்றைச் சுட்டிக்காட்டி அதனை இலக்கிய நயத்தோடு விளக்கி உரை செய்த பாங்கினையும் காணமுடிகிறது.

''நெடுந்தேர் அஞ்சி
கொன்முனை இரவூர் போலச்
சிலவாகுக நீ துஞ்சும் நாளே'' [22]

(குறுந். 9 )

என்ற அடிகளுக்கு உ.வே. சாமிநாதய்யர் பின்வருமாறு பொருள் எழுதுகிறார். 'அதியமான் அஞ்சி' என்னும் அரசனின் அச்சத்தைச் செய்யும் போர்க்களத்தில் உள்ள இரவையுடைய ஊரில் உள்ளார் போல் நீ துயிலும் நாட்கள் சிலவே ஆகும். 'இரவூர் என்பதற்கு இரவையுடைய ஊர்' என்று உரையாசிரியர் விளக்கம் அளிக்கிறார். அதுபோன்றே 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்னும் குறளுக்கு உரைஎழுதிய ஆசிரியர் உடுக்கையிழந்தவன் எனும் தொடருக்கு 'அரங்கத்தில் உடுக்கை இழந்தவன்' என்று விளக்கம் தந்து, ஒருவனின் கை பொது அரங்கில் பல்லோர் முன்னிலையில் இழந்த ஆடையைக் கைப்பற்றிட அனிச்சையாய் செல்லும் வேகத்தை, பதற்றத்தைக் காட்டியிருப்பது குறளின் இலக்கிய வளத்தை மேம்படுத்துவதாகும். தமிழில் இன்றுவரை இலக்கிய நூல்களுக்கு எவ்வளவோ உரைகள் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் சங்ககால நூல்களுக்கு எழுதப்பட்டுள்ள உரைகளில் சிலவற்றைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

| இலக்கிய நூல்கள் | உரையாசிரியர் பெயரும் உரையும் |
| --- | --- |
| புறநானூறு | பழைய உரை |
| அகநானூறு | மூன்று பழைய உரைகள் |
| ஐங்குறுநூறு | பழைய உரை |
| பதிற்றுப்பத்து | பழைய உரை |
| பரிபாடல் | பரிமேலழகர் உரை |
| கலித்தொகை | நச்சினார்க்கினியர் உரை |
| குறுந்தொகை | பேராசிரியர் உரை |
| நற்றிணை | ----------- |
| திருமுருகாற்றுப்படை | நக்கீரர் உரை |
| பத்துப்பாட்டு | நச்சினார்க்கினியர் உரை |
| நெடுநல்வாடை | நக்கீரர் உரை |
| சீவகசிந்தாமணி | நச்சினார்க்கினியர் உரை |
| சிலப்பதிகாரம் | அடியார்க்கு நல்லார் உரை |

# இலக்கண உரைகள்

கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலக்கண நூல்களுக்கான உரைகள் அச்சில் வெளிவரத் தொடங்கின. தொல்காப்பிய எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரையுடன் 1849-ல் மழவை மகாலிங்க ஐயரால் வெளியிடப்பட்டது. 1984 வரை தொல்காப்பியத்திற்கு 94 உரை நூல்கள் வெளிவந்துள்ளன. அதன் பிறகு இன்றுவரை தொல்காப்பியத்திற்குப் பல உரை

**இலக்கண உரைகள்**

இலக்கண உரைகளையும் இரண்டு நிலைகளில் வைத்து நோக்கலாம். அவை, பழைய இலக்கண உரைகள், புதிய இலக்கண உரைகள் என்பன, பழைய இலக்கண உரைகளாக இறையனார் அகப்பொருள் உரையையும், தொல்காப்பிய உரைகளையும் ஏற்றுக்கொள்ளல் தகும். தொல்காப்பிய உரைகளை,

தொல்காப்பியம்

- எழுத்ததிகாரம்
  - இளம்
  - நச்சர்
- சொல்லதிகாரம்
  - இளம்
  - சேனாவரையர்
  - நச்சர்
  - கல்லாடர்
  - தெய்வச்சிலையார்
  - பழைய உரையாசிரியர்
- பொருளதிகாரம்
  - இளம்
  - நச்சர்
  - பேராசிரியர்

ான்ற பாகுபாட்டில் பழைய உரைகளை வகைப்படுத்தி அறியமுடிகின்றது

பிற்காலத்தில் கணேசஐயர், வெள்ளைவாரணர், கு.சுந்தரமூர்த்தி, வ.உ.சிதம்பரம் பிள்ளை முதலானவர்களின் உரைகள் தோன்றலாயின. பழைய உரையாசிரியர்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை முதலான வழிநூல்களும், சார்பு நூல்களும் தோன்றலாயின. பின் அவற்றிற்கு உரைகளும் தோன்றின.

# இலக்கண உரையாசிரியர்கள்

| | உரையாசிரியர் பெயர் | சமயம் | காலம் | இடம் | பதிப்பாசிரியர் | ஆசிரியர் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மயிலைநாதர் | சமணம் | சீயகங்கன் | கொங்குநாடு | உ.வே.சா | | |
| 2. | சங்கர நமச்சிவாயர் | சைவம் | 17-ஆம் நூற்றாண்டு | நெல்லை | உ.வே.சா | சாமிநாத தேசிகர் | |
| 3. | ஆண்டிப்புலவர் | | 15-ஆம் நூற்றாண்டு | செஞ்சி | | பாவாடை (தந்தை) | உரையறி நன்னூல் முழுவதும் கிடைக்கவில்லை |
| 4. | கூழங்கைத் தம்பிரான் | சைவம் | | காஞ்சி | ப.தாமோதரன் | வைத்தியலிங்கச்செட்டியார் | உரை செர்மனியில் கிடைத்தது |
| 5. | இராமானுசக் கவிராயர் | வைணவம் | 19ஆம் நூற்றாண்டு | இராமநாதபுரம் | | சோம சுந்தரக் கவிராயர் | ஜி.யு.போப்பின் குரு |
| 6. | விசாகப் பெருமாள் ஐயர் | வீரசைவம் | 19ஆம் நூற்றாண்டு | திருத்தணிகை | | இராமானுசக் கவிராயர் | நன்னூல் எளிய உரை துவக்கம் |
| 7. | ஆறுமுகநாவலர் | சைவம் | 1822ஆம் ஆண்டு | யாழ்ப்பாணத்து நல்லூர் | சி.வை. தாமோதரம் பிள்ளை | | கந்தப்பிள்ளை சிவகாமி பெற்றோர் |
| 8. | சடகோபராமானுசாச்சாரியார் | | 1871 ஆம் ஆண்டு | திருவல்லிக்கேணி | | | |

நூல்கள் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன. அதற்குப் பிறகு வந்த உரைகளில் குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு ஒரு சில உரைகளே காணப்படுகின்றன. ஆ. சிவலிங்கனார் தொல்காப்பியத்திற்கு இயல் வாரியாக எழுதியுள்ள (1986) உரைகளும், ச. பால சுந்தரம் எழுதியுள்ள 'தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகை உரை' (1988) என்ற உரை நூல்களும், கு. சுந்தரமூர்த்தி தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கு எழுதியுள்ள (1989) உரை நூல்களும், கோ. கிருஷ்ணமூர்த்தி எழுதியுள்ள 'தொல்காப்பிய ஆய்வின் வரலாறு' (1990) என்பன போன்ற உரை நூல்கள் வெளிவந்துள்ளன. நன்னூல் 30 உரை நூல்களையும், யாப்பருங்கலக்காரிகை 13 உரை நூல்களையும், நம்பியகப்பொருள் 11 உரை நூல்களையும், புறப்பொருள் வெண்பாமாலை 7 உரை நூல்களையும், தண்டியலங்காரம் 6 உரை நூல்களையும் கொண்டுள்ளன. இதுவரை ஏறக்குறைய 174 இலக்கண உரை நூல்கள் வெளிவந்துள்ளதாக மு.வை அரவிந்தன் குறிப்பிடுகிறார்.[23]

இலக்கிய உரைகளிலிருந்து இலக்கண உரைகள் அதன் கட்டமைப்பிலும், மொழி நடையிலும் அதன் பயன்பாட்டு நோக்கிலும் மாறுபட்டுள்ளன. இலக்கிய உரைகள் பல்வேறு நூற்பாக்களை மேற்கோள்காட்டி இலக்கண நூற்பாவின் கருத்தினை ஆதரித்தும், மாறுபட்டிருப்பின் மெல்ல அதனைச் சுட்டியும் விளக்கமளிக்கின்றன. வினாவிடைப் பாங்கில் அமையும் இலக்கண உரைகள் கூட இலக்கண நூற்பாவின் பல்வேறு விளக்கங்களை வெளிக்காட்டும் முயற்சிகளாக அமைகின்றன. நயம் பாராட்டாது தெளிவுடனும் செறிவுடனும் விளக்கமளிக்கும் பாங்கில் இலக்கண உரைகள் அமைகின்றன.

தமிழ்மொழி அமைப்பின் சிறப்புகளை அறிந்து கொள்ளப் பயன்படும் இலக்கண நூல்களுக்கு எல்லாம் பெரும்பாலும் உரைகள் தோன்றியிருக்கின்றன. ஏனெனில் உரைகள் இல்லையெனில் இலக்கண நூல்களைப் படிப்பதோ, புரிந்து கொள்வதோ கடினமான ஒன்றாகும். இவ்விலக்கண நூல்களை எழுதிய நூலாசிரியர்களையும், அவற்றிற்கு உரை எழுதிய உரையாசிரியர்களையும் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

| இலக்கண நூல்கள் | நூலாசிரியர் | உரையாசிரியர் |
|---|---|---|
| தொல்காப்பியம் | தொல்காப்பியனார் | இளம்பூரணர், சேனாவரையர் நச்சினார்க்கினியர், பேராசிரியர், தெய்வச் சிலையார், கல்லாடர் (உட்பட பலர்) |
| இறையனார் அகப்பொருள் | இறையனார் | நக்கீரர் |
| யாப்பருங்கலக்காரிகை | அமிதசாகரனார் | குணசாகரர் |
| வீரசோழியம் | புத்தமித்திரனார் | பெருந்தேவனார் |
| நேமிநாதம் | குணவீரபண்டிதர் | பழைய உரை |
| தண்டியலங்காரம் | தண்டி | பழைய உரை |
| நன்னூல் | பவணந்தி | மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞானமுனிவர் ஆறுமுகநாவலர் (உட்பட பலர்) |
| நம்பியகப்பொருள் | நாற்கவிராச நம்பி | நாற்கவிராச நம்பி |
| மாறனலங்காரம் | காரி இரத்தின கவிராயர் | காரி இரத்தின கவிராயர் |
| பிரயோக விவேகம் | சுப்பிரமணிய தீட்சிதர் | சுப்பிரமணிய தீட்சிதர் |
| இலக்கண விளக்கம் | வைத்தியநாத தேசிகர் | வைத்தியநாத தேசிகர் |
| இலக்கணக்கொத்து | சுவாமிநாத தேசிகர் | சுவாமிநாத தேசிகர் |
| முத்து வீரியம் | முத்துவீர உபாத்தியாயர் | திருப்பாற்கடல் நாதன் |
| புறப்பொருள் வெண்பாமாலை | ஐயனாரிதனார் | சாமுண்டி தேவநாயகர் |
| யாப்பருங்கலம் | அமிர்தசாகரனார் | குணசாகரர் |

# தொல்காப்பிய உரைகளும் உரையாசிரியர்களும்

தமிழில் உள்ள மிகப் பழைமையான முதன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம் என்பதை நாம் அறிவோம். இம் மூலநூல் தோன்றி ஏறக்குறைய ஒன்பது நூற்றாண்டுகளுக்குப் பின்னரே உரைகள் தோன்றியுள்ளன. இதன் வழித் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன் மூலநூல் உரையின்றித் தானே விளங்கி வந்துள்ளது எனக் கருதலாம். இலக்கிய நூல்களை விட இலக்கண நூல்களுக்கே உரைநூல்கள் அதிகம் காணப்படுவதால் இலக்கிய நூல்களை விட, இலக்கண நூல்களைப் புரிந்து கொள்வது கடினம் என்பது உணரத்தகும், இலக்கண நூல்களை ஒவ்வொருவரும் தமக்கே உரிய முறையில் நயங்கூறித் புரிந்து கொண்டால் அதன் சரியான பொருள் விளங்காமல் போய் மொழிக்கு அடிப்படையாகவும் ஆதாரமாகவும் உள்ள மொழிக்கட்டமைப்பு பல்வேறாகி மொழியமைப்பைச் சீர்குலைத்துவிடும். எனவே, இலக்கண நூற்பாக்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் அறிவார்ந்ததும், செறிவு மிக்கதுமாய் இருப்பதால், கற்றறிந்த ஒருவர் தெளிவாக விளக்கி உரைப்பதே இலக்கண நூலை முறையாகவும், சரியாகவும் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பாகும். அவ்வகையில் தொல்காப்பியம் எனும் முதல் இலக்கண நூலுக்குப் பல உரைகள் தோன்றி வருவதும், தொடர்ந்து அந்நூல் படிக்கப்பட்டு, உரையெழுதப்பட்டு இன்று வரைத் தமிழ் மொழிக்கு அடிப்படையாகவும், ஆதாரமாகம் விளங்கிவருவதும் தொல்காப்பிய இலக்கண நூலின் சிறப்புகளைத் தெளிவுபடுத்துகின்றன. தொல்காப்பியம் முழுமைக்கும் உரையெழுதியவர்களும் உண்டு. அதன் அதிகாரங்களுக்கும், இயல்களுக்கும் மட்டும் உரையெழுதிய உரையாசிரியர்களும் உண்டு. அவ்வகையில் தனித்தனியே உரையாசிரியர்களும் அவர் எழுதிய உரைகளும் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளன.

## தொல்காப்பியம்( முழுமைக்கும் உரை எழுதியவர்கள்)

| காலம் | உரையாசிரியர் | அதிகாரம் | | |
|---|---|---|---|---|
| 11-ஆம் நூற்றாண்டு | இளம்பூரணர் | எழுத்து | சொல் | பொருள் |
| 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி | நச்சினார்க்கினியர் | எழுத்து | சொல் | மெய்ப்பாட்டியல்,உவமையியல், மரபியல் ஒழிந்த 6 இயல்களுக்கு மட்டும் |

## எழுத்ததிகார உரையாசிரியர்கள்

| காலம் | உரையாசிரியர் | அதிகாரம் |
|---|---|---|
| 11-ஆம் நூற்றாண்டு | இளம்பூரணர் | எழுத்ததிகாரம் |
| 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி | நச்சினார்க்கினியர் | எழுத்ததிகாரம் |

# சொல்லதிகார உரையாசிரியர்கள்

| காலம் | உரையாசிரியர்கள் | அதிகாரம் |
|---|---|---|
| 11-ஆம் நூற்றாண்டு | இளம்பூரணர் | சொல்லதிகாரம் |
| 14-ஆம் நூற்றாண்டு | சேனாவரையர் | சொல்லதிகாரம் |
| 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி | நச்சினார்க்கினியர் | சொல்லதிகாரம் |
| 14-ஆம் நூற்றாண்டு | தெய்வச்சிலையார் | சொல்லதிகாரம் |
| 15-ஆம் நூற்றாண்டு | கல்லாடர் | சொல்லதிகாரம் |
| 16-ஆம் நூற்றாண்டு | பழைய உரை | (முழுமையும் கிடைக்கவில்லை) |

## சொல்லதிகாரம் (மட்டும்)

| காலம் | உரையாசிரியர் | அதிகாரம் |
|---|---|---|
| 14-ஆம் நூற்றாண்டு | சேனாவரையர் | சொல்லதிகாரம் |
| 14-ஆம் நூற்றாண்டு | தெய்வச்சிலையார் | சொல்லதிகாரம் |
| 15-ஆம் நூற்றாண்டு | கல்லாடர் | சொல்லதிகாரம் |
| 16-ஆம் நூற்றாண்டு | பழையவுரை | (முழுமையும் கிடைக்கவில்லை) |

### பொருளதிகார உரையாசிரியர்கள்

| காலம் | உரையாசிரியர் | அதிகாரம் |
|---|---|---|
| 11-ஆம் நூற்றாண்டு | இளம்பூரணர் | பொருளதிகாரம் |
| 14-ஆம் நூற்றாண்டு | நச்சினார்க்கினியர் | பொருளதிகாரம் |
| 13-ஆம் நூற்றாண்டு | பேராசிரியர் | மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் |

### **பொருளதிகாரம்** (மட்டும்)

| காலம் | உரையாசிரியர் | அதிகாரம் |
|---|---|---|
| 13-ஆம் நூற்றாண்டு | பேராசிரியர் | பொருளதிகாரம் (மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல்) |

ஒவ்வொரு உரையாசிரியரும் தனக்கெனச் சில தனிச்சிறப்புகளோடு உரைகளை எழுதியுள்ளனர். ஒவ்வொருவரும் அவரவர் உரைகளில் தம்காலம், சமயப் பின்னணி, கல்விச்சூழல், சமூகப் பின்புலம் ஆகியவற்றிற்கு ஏற்ப உரைகளை அமைத்துள்ள பாங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# மூலப்பாடம்

ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடம் கூறுகின்ற வகையில்தான் உரைகள் முதலில் தோன்றியுள்ளன. அவ்வாறாயின் மூலநூல்கள் தோன்றிய காலங்களில் உரைகளும் தோன்றியிருத்தல் வேண்டும். ஆசிரியன் தான் எழுதிய நூலாக இருந்தாலும் அவற்றை அவையின் முன் நிறுத்த அவற்றிற்கு விளக்கங்களையும், சான்றுகளையும் தந்திருக்க வேண்டும். அந்நிலையில் உரையும் தோற்றம் பெற்றிருக்கும். இதற்கு மறுதலையாக,

> "மூலநூல்கள் தோன்றிய காலத்திலேயே அவற்றிற்கு உரையும்
> தோன்றி விட்டன எனக் கூறல் இயலாது."(15)

என்று கூறப்படும் கருத்து ஏற்புடையதன்று.

உரைகள் தோன்றியது பிறகு என்றாலும் உரை பற்றிய சிந்தனை நூலைப் படைக்கும் போதே நூலாசிரியனுக்கு ஏற்பட்டு விடுகின்றது. தற்காலத்தில் காணப்படும் குறியீட்டுக் கவிதைகளை நோக்க அவை தெற்றென விளங்கும். எனவே, வரலாற்று ஆசிரியர்கள் மனிதன் என்று தோன்றினானோ அன்றே சிந்திக்கவும் தொடங்கி விட்டான் என்று கூறுவது போல நூல்கள் என்று தோன்றியதோ அன்றே உரைகளும் தோன்றி விட்டன என உணர வேண்டும்.

இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகிய பழைய உரையாசிரியர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு அளவிட முடியாத ஒன்றாகும். தமிழறிவும், உலக அறிவும், திறமையும் கொண்ட இப்பெருமக்கள் பவணந்தியார், புத்தமித்திரனார், ஐயனாரிதனார், நாற்கவிராசநம்பி போல் தாமே புது இலக்கண நூல் படைக்கவல்ல ஆற்றல் பெற்றவர்கள். எனவே, பின் எழுந்த இலக்கண நூல்களுக்கு இந்த உரைகள் மூலங்களாகத் திகழ்கின்றன. இதனைப்,

"பின் எழுந்த இலக்கண நூல்களுக்கெல்லாம் கருத்து
வழங்கினவைகள் இவ்வுரைகள் ஆதலின் இவற்றை உரை
மூலங்கள் என மதிக்க வேண்டும்."(26)

என்னும் மேற்கோள் எடுத்துக்காட்டும். உமாபதி சிவாசாரியார் குறிப்பிடுகையில்,

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒள்ளிய சீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம்"(27)

என்று குறிப்பிடுகின்றார். இதில் தெய்வப்புலமைத் திருவள்ளுவரோடு ஒருங்கு வைத்து எண்ணுவதற்குரிய பெருமையுடையவர் பரிமேலழகர் எனச் சுட்டப்பட்டுள்ளது. நூலாசிரியர்களைக் காட்டிலும் உரையாசிரியர்கள் மொழிப்புலமை பெற்றுத் திகழந்துள்ளனர் என்பதை,

## உரைக்கு உரை

மூலநூல்களை விளக்க உரைகள் தோன்றின. அவ்வுரைகளுக்கு விளக்கம் வேண்டிப் பிற்காலத்தில் அதற்கும் உரைகள் தோன்றலாயின.

> "உரையாசிரியர்கள் எழுதிய உரை விளக்கங்கள் காலப்போக்கில் விளங்காத நிலையை அடைந்தன. அதனால் உரைக்கு உரை எழுத வேண்டிய தேவை ஏற்பட்டது" (81)

என்று மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள் என்னும் தமது நூலில் குறிப்பிடுகின்றார். நாலாயிர திவ்ய பிரபந்த வியாக்கியானங்களுக்குப் பல அரும்பத உரைகள் தோன்றியுள்ளன. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமேனி இரத்தினகவிராயர் பரிமேலழகர் உரைக்கு நுண்பொருள் மாலை என்ற நூலை இயற்றியுள்ளார். மேலும், 1869 ஆம் ஆண்டு சரவணப்பெருமாள் ஐயர் பரிமேலழகர் உரைக்குப் பல விளக்கங்கள் எழுதிப் பதிப்பித்தார்.

1885 ஆம் ஆண்டு முருகேச முதலியார் பரிமேலழகர் உரைக்கு விளக்கம் எழுதி வெளியிட்டார். இராமானுசக்கவிராயர், வை.மு.சடகோப ராமாநுசாச்சாரியார், கோ.வடிவேல் செட்டியார், 1919 ஆம் ஆண்டில் அரசன் சண்முகனார், வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் போன்றோர் பரிமேலழகரின் உரைக்கு விரிவான உரையினை எழுதியுள்ளனர்.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்றுக்கும் பழைய உரைகளுடன் தானும் உரை எழுதி வெளியிட்டவர் ஈழத்து அறிஞராகிய கணேசஐயர். தேவநேயப்பாவாணர், கு.சுந்தரமூர்த்தி, பூவராகம்பிள்ளை ஆகியோர் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள தொல்காப்பிய உரைகளுக்கு விளக்க உரையினை எழுதியுள்ளனர்.

மயிலம் சிவலிங்கனார், அடிகாளாசிரியர் போன்றோர் இளம்பூரணம் எழுத்ததிகாரத்திற்கு விளக்கவுரை எழுதியுள்ளனர். இவ்வாறு நூலுக்கு உரை எழுதும் மரபு மாறி, உரைக்கு உரை எழுதும் மரபும்

## நூலாசிரியரே உரை எழுதுதல்

நூலாசிரியரே உரை எழுதும் முறையும் தமிழிலக்கிய உலகில் இருந்து வந்துள்ளது.

> "நூலாசிரியரே உரை எழுதும் வழக்கம் வடமொழியாளரிடம் உண்டு. இதனை வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார் என்று பிரயோக விவேகம் கூறுகின்றது."[82]

இந்த முறை வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இக்கருத்தினை அடியொற்றித் தமிழ்மொழியில் உரை எழுதிய முதல் நூலாசிரியர் புறப்பொருள் வெண்பாமாலையை இயற்றிய ஐயனாரிதனார் என்பவராவர். இதனைத்,

"தமிழ்மொழியில், நூலாசிரியரே உரை எழுதும் வழக்கத்திற்குக் கால்கோள் செய்தவர் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார்."(83)

என்று ஆராய்ச்சியாளர் கூறும் கருத்து ஈங்கு ஒப்ப நோக்கத்தக்கதாகும். இவரைப் பின்பற்றி நாற்கவிராசநம்பியின் அகப்பொருள் விளக்கவுரை, சுப்பிரமணிய தீட்சிதரின் பிரயோகவிவேகவுரை, வைத்தியநாத தேசிகரின் இலக்கணவிளக்கவுரை, சுவாமிநாத தேசிகரின் இலக்கணக்கொத்து உரை முதலியன வெளிவந்துள்ளன. இதே முறை ஈழத்திலும் வழங்கப்பட்டு வந்துள்ளன. ஈழத்தில் பிற்காலத்தில் சிலேடை நூல்கள் இயற்றிய பலர் அந்த நூல்களுக்கு நூலாசிரியர்களே உரை எழுதியுள்ளனர். இதனைக்,

"கதிரைச் சிலேடை வெண்பா எழுதிய சோமசுந்தரப்புலவர், தஞ்சைச் சிலேடை வெண்பா எழுதிய கணபதிப்பிள்ளை முதலியோர் தமது நூல்களுக்குத் தாமே உரையும் எழுதியுள்ளனர்." (84)

என்னும் கருத்தால் அறியமுடிகின்றது. எனவே, நூலாசிரியர் உரை எழுதுவது பின் வருவோர் தம் கருத்தை மாறுபடக் கொள்வாரோ என்ற தயக்கத்தில் எழுதி இருந்தாலும் மற்றவர்களுக்கு வாய்ப்பளிப்பதும் அவர்தம் கடமையாகும். தன்னைப் பற்றித் திறனாய்வு செய்து கொள்வதைப் போன்றே அதுவும் அமைந்து விடக் கூடியதாக அமைகின்றது. மூலநூல் ஆசிரியனே உரையும் எழுதுவதால் குறைகள், நிறைகள் சமமாகப் பார்க்க இடமில்லாமல் போகின்றது.

## கருத்துரை

- கருத்துரை நூற்பா நுதலும் பொருளைக் குறிப்பாகச் சுட்டுவது கருத்துரை. கருத்துரையில், நூற்பாக்களின் உட்கருத்து, அவற்றின் வைப்பு முறை, பொது விதி, சிறப்பு விதி, புறனடை விதி முதலிய விதி வகைகள் எல்லாம் கருத்துரையில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. நிறுத்த முறை" எனும் உரை மரபுத் தொடரைப் பயன்படுத்திப் பவணந்தி முனிவாறன் நூலாக்கத் திறனை. மயிலைநாதார் நமச்சிவாயர் போன்ற உரையாசிரியர்கள் குறிப்பிடுவது கருத்துரையின் உள்ளடக்கத்தில் இன்றியமையாத பகுதியாகும். நூற்பாவின் கருத்தை நுட்பமாகப் புலப்படுத்துவது கருத்துரையாகும். கருத்துரை என்பது புறப்பொருள் வெண்பாமாலையில் உள்ள கொளுச் சூத்திரத்தோடு இது ஓரளவு ஒப்பமையுடையது எனலாம். உரையின் தொடக்கத்தில், 1. என்பது சூத்திரம் 2. என் நுதலிற்றோ எனின் 3. பாயிரத்திற்கு வரும் காரணக் குறிகள் உணர்த்துதல் நுதலிற்று 4. இதுவுமது போன்றன உரையாசிhpயர்கள் குறிப்பிடுகின்ற கருத்துரையாகும் அதாவது சூத்திரத்தின் கருத்தை கற்பித்தல் முறையிலேயே விளக்குவதாகும். கருத்துரையின் சொல்லாட்சியும், நடையும் இதனைப் புலப்படுத்துகின்றன. மயிலைநாதா; - என்,

# கருத்துரை

- கருத்துரை: உரையாசிரிகளிடையே கருத்துரை விளக்கம் தருமிடத்து பல்வேறு வேறுபாடுகளைக் காணமுடிகிறது. அதிகாரம் தோறும், இயல் தோறும், நூற்பா தோறும் கருத்துரை வரைவதில் வேறுபடுகின்றது. சான்றாக மயிலைநாதர் கூறும் கருத்துரையில், எழுத்ததிகாரத் தொடாக்கத்தில் எ-து சூத்திரம் - இவ்வதிகாரம் என்னுதலி எடுத்துக்கொள்ளப்பட்டதோ வெனின் அதிகார நுதலியதூஉம் அதிகாரத்தினது பெயருரைப்பவே விளங்கும் ஆயின், இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின் எழுத்திலக்கண முணர்த்தினமையின் எழுத்திகாரமென்னும் பெயர்த்து எழுதப்படுதலின எழுத்தெனக் கொள்க. அதிகாரமென்றது முறைமையை எ-று. இவ்வதிகாரத்துள் எனைவகை யோத்தினான் உணர்த்தினானென்க. அவற்றுள் இம்முதலோத்து என்னுதலிற்றோவெனின், ஒத்து நுதலியதூஉம் ஒத்தினது பெயருரைப்பவே விளங்கும் ஆயின், இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின். என் பெயர் முதலான எழுத்திலணக்கம் பத்தும் உணா;த்திற்றாகலான் எழுத்தியல் என்னும் பெயர்த்து. இவ்வோத்தினுள், இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், ஒரு சாரார்; வேண்டும் சிறப்புப் பாயிரம் உணர்த்துதல் நுதலிற்று என்னை வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொல்லச் சிறப்பென்னும் பாயிரமாம் (யா.வி.க.உரை) என்றாராகலின், பமலி றொழுது" என வணக்கம் சொன்னவாறு. நன்கியம் புவனெழுத்து" என அதிகாரம் சொன்னவாறு. அஃதேல் நூல் நுவல்வான் புகுந்து நன்று சொன்னாய்! வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து மங்கல மொழி முதலாக வகுத்தே, யெடுத்துக்கொண்ட விலக்கண விலக்கியம், இடுக்க ணின்றி யினிது முடியும் (யா.வி.க,உரை) என்பவாகலின் தெளிவாகவும் எளிமையாகவும் கருத்துரையெழுதிச் செல்கின்றார். எனின், கடவுள் வணக்கமும் அதிகாரமும் உணற்று என்றும் இவ்வாறே சிவஞான முனிவரும் குறிப்பிடுகின்றார். கூழங்கைத் தம்பிரான், விசாகப்பெருமாளையா; ஆகியயோர் முறையே சூ-ம் வணக்கமும் அதிகாரமும் சொன்னது என்றும் இது, கடவுள் வணக்கமும் அதிகாரமும் உணர்த்துகின்றது என்றும் கருத்துரை வழங்குகின்றனர். ஆ.முத்துத் தம்பிப்பிள்[illegible]வர்கள் கூறியுள்ள கருத்துரையில்கடவுள் வணக்கமும் எடுத்துக் கொண்ட விசயமு[illegible] சூத்திரம் யாது? என்ற வினாவினைக் கேட்டுத் தானே

# பதவுரை

- பதவுரை: செய்யுள் முதலியவற்றுக்குச் சொற்றொடரைப் பதம் பதமாக பிரித்துப் பொருள் கூறுதலே பதவுரையாகும். பதவுரை" எழுதும் பாங்கினை பல்வேறு உரையாசிரியர்களிடம் காண முடிகிறது. நன்னூலுக்குக் கிடைத்துள்ள உரைகளுள் பதவுரை எழுதியவர்கள் எண்ணிக்கை பெரும்பான்மையாக அமைந்துள்ளது. கூழங்கைத்தம்பிரான், விசாகப்பெருமாளையர், முகவை இராமாநுசக் கவிராயர், கா. கோபாலாச்சாரியார், தி.கோ.ரங்காசாரியார் வ.குமாராசமிப் புலவர், வை.மு. சடகோபராமானுசாசாரியர், சே. கிருஷ்ணமாசாரியார், பவானந்தம்பிள்ளை, கா. நமச்சிவாய முதலியார் போன்றோர் பெரும்பாலும் பதவுரையாகவே உரை வகுத்துள்ளனர். மயிலைநாதர் - சங்கரநமச்சிவாயர், சிவஞானமுனிவர், தண்டபாணி தேசிகள், மோசகுபொன்னையா ஆகியோர் பதவுரை எழுதாது தெளிவுரையாகவும், விளக்கவுரையாகவும் உரை எழுதியுள்ளனர். சிற்சல இடங்களில் மயிலைநாதர் பதவுரை வரைந்துள்ளார். பாயிரத்தின் பெயர் பற்றிய உரையில் பதவுரை கூறுமிடங்களில் வேற்றுமைகள் இருப்பதனைக் காண முடிகிறது. முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம் புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம் எனும் நூற்பாவில் முகவுரை" என்பதற்குக். கூழங்கைத் தம்பிரான் முகமாய் இருத்தலான் முகவுரை என்றும்" விசாகப்பெருமாளையர் பாயிரத்தின் இலக்கணங்ளை முன்னேயறிய வேண்டி நூலிற்கு முன் சொல்லப்படுதலினாலே முகவுரை என்றும்" முகவை இராமாநுசக் கவிராயர் முன்னுரைக்கப்படுதலால் முகவுரையென்றும்" நூலுக்கு முன் சொல்லப்படுவது முகவுரை என்று பவானந்தம்பிள்ளை, கா.நமச்சிவாயர், மோசகுபொன்னையா ஆகியோர் பதவுரை எழுதுகின்றனர். பதவுரையோடு அரும்பதவுரை எழுதும் வழக்கம் சில உரையாசிரியர்களிடம் காண முடிகிறது.

# பொழிப்புரை

- பொழிப்புரை பொழிப்புரையாவது, செய்யுள் முதலியவற்றின் பொருளைத்திரட்டி அல்லது தொகுத்துக் கூறும் உரையாகும். பொழிப்பெனப்படுவது பொருந்திய பொருளைப் பிண்டமாகக் கொண்டுரைப்பதுவே என்று யாப்பருங்கலவிருத்தி உரைகாரர் உரைப்பதனைக் கொண்டு மயிலைநாதர் தன் உரையில் பல விடங்களில் பொழிப்புரையாகவே உரை வரைத்துள ்ளார். எழுத்தியலில், கடவுள் வணக்கமும் அதிகாரமும் உணர்த்துகின்ற நூற்பாவிற்கு உரை வரையுமிடத்து பொழிப்புரை அமைந்துள்ளார். நால்வகைப் பூக்களினால் மிக்குடைய அசோகினது தன் எல ்லையை இகவாதே எப்பொழுதும் அலங்கரியா நின்ற நிழலிலே எழுந்தருளியிருந்த நான்முகத் தொருவானை மனமொழி மெய்களின் மகிழ்ந்துடன் வணங்கி உரிச்சொல்லினது இயல்பு உணர்த்துமிடத்து, பண்புகள் குணப்பண்பும், தொழிற்பண்பும் ஆகிய இரண்டினுள் அடங்குமாயினும், இசை குறிப்புப் பண்பென பல்வேறு வகைப்படுதலின் பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, அங்கனம் உணர்த்துழி ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்துவனவும், பல குணத்தை உணர்த்துவனவுமாய் ஏனைப் பெயர் வினைகளை விட ்டு நீங்காமாய்ச் செய்யுட்குரியனவாய்ப் பொருட்குரிமை பூண்டு வருவன உரிச்சொல்லாம் என்று உரைக்குமிடத்து, இசை ஓசை, குறிப்பு மனத்தாற் குறித்து உணரப்படுவது பண்பு பொறியாலுணரப்படுவது என்று பொழிப்புரையில் அமைந்துள்ளார். பொழிப்புரையின் அமைப்பு சூத்திரத்தின் செய்யுள் நடையை மாற்றி உரை நடையில் உரைப்பதே பொழிப்புரையாகும ். நமச்சிவாயர் வரைந்துள்ள பொழிப்புரை இதற்கு இலக்கியமாகத் திகழ்கிறது. பொழிப்புரை வரைவதில் சுருக்கம், விளக்கம், நூற்பாவின் கிடக்கை முறை, மொழிநடை, தொகைக் குறிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொழிப்புரை வரைந்துள்ளார். நமச்சிவாயரின் பொழிப்புரை கருத்துரைக்கு அடுத்து அமைவது பொழிப்புரையாகும். சிறப்புப்பாயிரம் நீங்கலாக மற்ற நூற்பாக்கள் எல்லாவற்றிற்கும ் நமச்சிவாயர் பொழிப்புரை வரைந்துள்ளார். சிறப்புப் பாயிரத்தின் அடியளவு கருதி அதற்கு மட்டும ் அவர் பதவுரை வரைந்திருக்கக் கூடும். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இளம்பூரணர் சில நூற்பாக்களுக்கு உரை எழுதாமல் இது சூத்திரத்தால் பொருள் விளங்கும ் என்று கூறுவதனைப் போல, நன்னூல் பாயிரப்பகுதிக்கு மயிலைநாதர் மிகவும் சுருக்கமாகவே உரை எழுதியுள்ளார். மயிலைநாதரின் எளிமை நடையைப் பின்பற்றாமல் சிறப்புப் பாயிரத்தைச் சிறப்பிக்கு மாற்றான். கூறும் உரையில் இப்பாயிரச் சூத்திரங்களை விரித்து எழுதின் பரக்கும ் என்பதனாலும், பெரும ்பாலும் தாமே பொருள் விளங்கிக் கிடத்தலானும் உரை விரித்து எழுதிற்றிலம் இவற்றை விளங்க விரித்து உரைத்துக் கொள்க என்று மயிலையின் உரைநடையை விடுத்து, அறிவுடையோர் மாடம் முதலிய மூன்றிற்கும ் சித்திரம் முதலிய மூன்றும் போலக் கருதி அழகிதாகிய பொருளை உணர்த்தா நின்ற இருவகைப் பாயிரங்களையும் உரைத்து, எவ்வகைப்பட்ட பெரிய நூல்கட்கும ் முன ்னர் பெய்து வைத்தார் பெரும் பாலும் ஆதலின், பாயிர மில்லது பனுவல்" அன்றாம் என்றவாறு என்று பொழிப்புரை எழுதுகின்றார். உயிர் மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு அ:.கிய இஉஐஔ ம:.கான் தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும எனும் நூற்பாவிற்கு இப்பத்தும ் சார்பெழுத்தாம்" என்று நமச்சிவாயர் சுருக்கமாகப் பொழிப்புரை வரைந்துள்ளளா

## வினா-விடை உரை

- வினாவிடை உரை சிறப்புப்பாயிரத்தைச் சிறப்பித்துக் கூறும், மாடக்குச் சித்திரமும் மாநாகர்க்குக் கோபுரமும் ஆடமைத்தோ ணல்லார்க் கணியும் போல் - நாடிமுன் ஐதுரையா நின்ற வணிந்துரையை யெந்நூற்கும் மெய்துரையா வைத்தார் பெரிது எனும் நூற்பாவுரையில் நூல் கேட்கப் புகுந்தார்க்குப் புறவுரைகேட்டுப் பயன் என்னையோவெனின், என வினா கூறி கொழுச்சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமாறு போலப் பருப்பொருட்டாகிய பாயிரங்கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்குமென்பதனாலும், சில வெழுத்தினானியன்ற நூற்கு இன்றியமையாத பாயிரமறியாதாய் என்று உவமையோடு விடை கூறுவதாக உரையியற்றியுள்ளார். ஆறனுருபு மேற்குமவ் வுருபே என்ற நூற்பாவுரையில் விளியேலாதெனினும் உருபேற்றலிற் குறைபட்டதாகாது சில உறுப்பிற் குறைபட்டாரும் மக்களெனப்படுவர் அதுபோலவென்பது என்றுரைத்துள்ளார். மூன்றாம் வேற்றுமை பற்றி உரை கூறுமிடத்து அரசனால் இயற்றப்பட்ட தேவகுலமென்றற் தொடக்கத்தனவற்றுள் உருபல்லாத பிறமொழிகள் வருமாறென்னையெனின் என வினா கூறி அவை கணலொடு புகையும் குடையொடு நிழலும் போல உருபுவர வந்து நீங்கநீங்கும் பொருளை விளக்க வேண்டுழி யெனக் கொள்க என்று வினா கூறி விடை உரைக்கின்றார்

# விளக்கவுரை

- விளக்கவுரை சூத்திரத்தின் உட்பொருளை விளக்குவதோடு மட்டும் அல்லாது அதன் தன்மை குறித்தும் விளக்கியுரைப்பது விளக்க உரையாகும் சான்றாக, உரிச்சொல்லின் பொது இலக்கணம் கூறும் நூற்பாவுரையில். பல்வேறுவகைப்பட்ட பண்புகளையும் அறிவிப்பனவான பெயர்ச்சொல்லாகி, ஒரு குணத்திற்கே உரியவாயும், பல குணத்திற்கே உரியவாயும், ஏனைப் பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும், தழுவி செய்யுட்கே நீங்காது வரும் கிழமையையுடையன உரிச்சொல்லன என்றவாறு. உரிச்சொல் யாது அஃது உரிச்சொல் பல்வகைப் பண்பு என்றது. தொழிற்பண்பும் தழுவுவதற்கென்க ஆயின், இருவகைப் பண்பும் பகர்பெயராகி என்று சூத்திரஞ் செய்யாது வைத்து, ஞாபகமாகக் கூறவேண்டுவ தென்னையோவெனின், தொழிற்பெயரெல்லாம் உரிச்சொல்லெனப்படாவாதலிற் செய்யுட்கே ஏற்று வருவன சில கோடற்கும் தொழிற்கருவியால் பெறப்படுதலால் ஏனைப் பண்புகள் போல் ஒரு தலையான ஒற்றுமைச் சிறப்பினவல்லவென்பது அறிவித்தற்குமெனக் கொள்க என விளக்கம் தருகின்றார். இதே போன்று சங்கரநமச்சிவாயர் தம் உரையில், இறப்பெதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே என்ற சூத்திரத்திற்கு விளக்கம் தருகின்றார். யாது ஒரு பொருளும் தோன்றும் அளவின் தோன்றி, வளரும் அளவின் வளர்ந்து முதிரும் அளவின் முதிர்ந்து, அழியும ் அளவின் அழியுமன்றி உயிர்கள் வேண்டியவாறு ஆகாமையின் அவற்றை அவ்வளவின் அவ்வாறு இயற்றுவது காலமெனவும், அதனால் இயலும் பொருள்களின் தொழில் இறந்ததும், எதிர்வதும், நிகழ்வதும் ஆதலின் அவ்வாறு இயற்றும் காலமும் மூன்று கூற்றதாம் எனவும் உய்த்துணர்தலின் இங்கனம் உணராது. காலம் இன்று எனவும் நிகழ்காலம் ஒன்றுமே எனவும் இறந்தகாலம் எதிர்காலம் இரண்டுமே எனவும் கூறுவார் கூற்றை விலக்கிக் காலம் மூன்றே" என்றார். இதன் திறம் இன்னும் விரித்து உரைப்பின் பெருகும். நிகழ்காலம் போல வெள்ளிடைப் பொருளன்றி இறந்தகாலம், எதிர்காலம் இரண்டும் மறைபொருளாய் நிற்றலின் இறப்புநிகழ்வு என்னாது இறப்பெதிர்வு என்றார் என்று விளக்கம் தருகின்றார். சிவஞான முனிவரின் விளக்கவுரை சிவஞான முனிவர் இலக்கண ஆராய்ச்சியில் வல்லவர். ஆராய்ந்த கருத்துக்களைத் தெளிவாக விளக்கும் ஆற்றலுடையவர். நன்னூல் நூற்பாக்கள் சிலவற்றிற்கு நுண்பொருள் விளக்கம் தருகின்றார். ஒவ்வொரு சொல்லையும் ஆழ்ந்து நோக்கிப் பொருள் காணுகின்றார். ஒருவர் என்பது உயர்இரு பாற்றாய்ப் பன்மை வினைகொளும் பாங்கற்று என்ப எனும் நூற்பாவில் உள்ள ஒவ்வொரு சொல்லிலும் ஆழ்ந்த பொருள் இருப்பதைப் பின்வருமாறு விளக்குகிறார். ஒருவர் - இச்சொல்லின் கண் பகுதிக்கேற்ப இருபாற்றாய்" என்றும் விகுதிக்கேற்ப பன்மை வினை கொளும் என்றும், உயர்திணை முப்பாலுள் பன்மையைப் பின்வித்தலின் ஆண், பெண் என விதவாது உயர் இருபாற்றாய் என்றும் உயர் என, முன் விதந்தவர் உயர்திணை பன்மை என விதவாது பன்மை என்றும், ஒருவர் வந்தான், ஒருவர் அவர் என வினையும் பெயரும் கொள வருவது உவப்பு உயர்வு முதலியவற்றான் வருவதாம் இங்கனம் தன்னியல்பாய் வரும் ஒருவர் என்பது வினையும், வினைக் குறிப்புமே கொள்ளும் என்பார் பெயரை ஒழித்து வினைகொளும் என்றும், இச்சொல் ஒருமைப் பகுதியோடு பன்மை விகுதி மயங்கிப் பால் வழுவாய் நின்றதேனும் தன்னியல்பாய் மயங்கி நின்றமையின் வழாநிலை போலும் என்பதூஉம் பன்மை வினை என்றது சொல் மாத்திரையில் பன்மைவினையன்றி, பொருள் மாத்திரையின் ஒருமை வினையாம் ஆதலின் இப்பயனிலையை ஒருவர் என்றும் சொல் கொள்ளுதல் வழுவென்று என்பதூஉம ் தோன்ற பாங்கிற்று என்றும். இங்கனம் ஆதல் சான்றோர்க்கு ஒப்ப முடிந்தது என்பார் என்ப என்றும் கூறினார். இப்பகுதியின் விளக்கவுரை முனிவரின் இலக்கண ஆராய்ச்சியைப் புலப்படுத்துகின்றது.

# விருத்தியுரை

- அகலவுரை: விருத்தியுரையின் சிறப்பியல்புகளை உள்ளடக்கியது அகலவுரையாகும். மூலநூலின் உட்பொருளை முழுமையாக விளக்கக்கூடியதும், தெளிவான நடையும், முறையான அமைப்பும் கொண்டது அகலவுரை சொற்பொருள் விளக்கம், இலக்கணக் குறிப்பு, வினாவிடைகள், நயவுரைப்பகுதிகள், அழகான உவமைகள், வடமொழி ஒப்பீடு பண்டைக்கால பழக்கவழக்கங்கள், பல்வேறு விதமான பெயர்கள் முதலிய இன்றியமையாத இயல்புகள் பலவும் அகலவுரையில் அமைந்துள்ளன. அகலவுரையை விரிவுரை எனவும் கூறலாம். அகலவுரைக்கு நக்கீரர் சூத்திரத்துட் பொருளைத் தூய்மை செய்வதற்குக் கடாவிடை உள்ளுறுத்து உரைக்கும் உரை எல்லாம் அகலவுரை என்று இறையனார் களவியல் உரையில் குறிப்பிடுவதாக அ. தாமோதரன் அவர்கள் எடுத்துரைக்கின்றார். நன்னூலுக்கு உரையியற்றிய உரையாளர்களுள் பலர் அகலவுரை எழுதுதலைப் பின்பற்றியுள்ளனர். மயிலைநாதர் சங்கரநமச்சிவாயர், முகவை இராமாநுசக்கவிராயர், ஆறுமுகநாவலர், மோசசு பொன்னையா போன்றோரைக் குறிப்பிடலாம். சிலவிடங்களின் அகலவுரை எழுதும் முறையை மயிலைநாதர் இராமாநுசர், வ. குமாரசாமிப்புலவர், 109 ஆறுமுகநாவலர், மோசசு போன்றோர் பின்பற்றுகின்றனர். சங்கரநமச்சிவாயர் பலவிடங்களில் அகலவுரை கூறியுள்ளார் சான்றாக, சொல்லதிகாரத்தில், முதலாவது இயலான பெயரியலில் சொல்லின் கூறுபாடும், அதன் இயல்பும் உணர்த்தும் சொல்லின் பொது இலக்கணம் கூறுமிடத்தில் விரிவாக அகலவுரை உரைத்துள்ளார் மயிலைநாதர். சங்கரநமச்சிவாயர் மூன்றிடத்தும் சொல் தன்னையும், பொருளையும் உணர்த்தும். படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பிற் பெறப்படுந் திணைபா லனைத்து மேனை இடத்தவற் றொருமை பன்மைப் பாலே எனும் நூற்பா, மூன்றிடத்தும் சொல் தன்னையும், பொருளையும் உணர்த்துவதனை குறிப்பிடும் உரையில் கருத்து, உதாரணம் ஆகியன கூறி, மேலும் விரிவாக விளக்கம் தருகிறார் சங்கரநமச்சிவாயர். வினைமுற்றை முற் கூறினமையான் அவை, இருதிணை மருங்கி னைம்பா லறிய விகுதிகளோடு பயின்று வருதலின் இருதிணை ஐம்பாற் பொருள்களை உணர்த்தும் நெறியில் பெயர்களில் சிறந்தன என்பதூஉம் தொடங்கி எல்லாச் சொல்லையும், வினைமுற்றுள்ளும் பெயருள்ளும் அடக்கி மூவகையிடத்தும் நின்ற சொல் இருதிணை ஐம்பால் பொருளையும், தன்னையும் உணர்த்தும் சிறப்பு விதி கூறிய தொல்காப்பியத்தையும், வயிர வூசியும் மயன்வினை யிரும்புஞ் செயிரறு பொன்னைச் செம்மை செய் யாணியுந் என்ற அகத்தியச் சான்றுகளையும், இறையனார் களவியலுரை சான்றினையும் காட்டி அகலவுரை நல்குகிறார். மயிலைநாதர் சிலவிடங்களிலும், சங்கரநமச்சிவாயர் பல இடங்களிலும், இவரைப் பின்பற்றி சிவஞானமுனிவரும் உரை வகுக்குமிடத்து அகலவுரையெழுதும் முறையைப் பின்பற்றியுள்ளதனை அறிய முடிகிறது.

## செய்யுள் உரை

- செய்யுள் நடை உரை உரைநடையில் மட்டுமன்றி செய்யுள் வடிவிலும் போன்று இலக்கண சில உரை நூல்கள் தோன்றியுள்ளன. இலக்கிய நூல்களைப் போன்று இலக்கண நூல்களுக்கும் செய்யுள் வடிவ உரை தோன்றியுள்ளது. நன்னூலுக்கு எழுந்த உரைகளுள் ஆண்டிப் புலவர் எழுதிய உரை செய்யுள் வடிவ உரையாகும். பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் ஆசிரிய விருத்தம் பாடவல்லவர். தம் மாணவர் நன்னூலை உரையுடன் கற்றுத் தெளிய ஆசிரிய விருத்தப்பாவால் உரை இயற்றியுள்ளார். செம்மை, சிறுமை என்ற நன்னூல் சூத்திரத்தின் விளக்கமாய் ஆசிரிய விருத்தம் அமைந்துள்ளது. செம்மையும் கருமையும் பசுமையும் வெண்மையும் திண்மையும் நுண்மை யுடனே சிறுமையும் பெருமையும் குறுமையும் நெடுமையும் தீமையும் தூய்மையும் அலால் என்று, விளக்கச் செய்யுள், செய்யுள் வடிவ உரைக்குச் சான்றாகிறது

# நயவுரை

நயவுரை நன்னூலுக்கு உரை இயற்றியுள்ள உரையாசியர்களுள் சிலரே நயவுரை எழுதியுள்ளனர். மூல பாடத்தில் உள ்ள சொற்களின் வழியே நூலாசிரியரின் கருத்தோட்டத்தை உள்ளவாறு உணர்ந்து விளக்கிக் கூறுவது உரையாசிரியர்களின் நோக்கமாகும். ஒரு நூற்பாவில் உள்ள சில சொற்களைத் தெரிவு செய்து அவற்றின் பொருள் அமைதியை விளக்கி உரைப்பது பதசாரம் அல்லது நயவுரை கூறுதல் எனப்படும். மூலப்பாடத்தில் அமைந்துள்ள சொற்களுக்கு எழுதும ் நயவுரைகளை உரையாசிரியர்கள் பொழிப்புரையில் சேர்த்து எழுதுதல் இயலாது. கூடாது. அவ்வாறு எழுதினராயின் மற்றொன்று விரித்தலாகக் கருதப்படும். அதே சமயம் நூற்பாவில் அமைந்துள்ள பொருள் பொதிந்துள்ள தொடர்களை விரித்துக் கூறி விளங்க வைத்தல் விருத்தியுரை ஆசிரியரின் கடமையாகும். இதற்குத் தீர்வாக அமைவது பதசாரம ் எழுதுதல் ஆகும். அதாவது நயவுரை என்பதாகும். பவணந்தி முனிவர் எந்தெந்தக் கருத்துக்களை எல்லாம் சிந்தையில் இருந்தி அவற்றுக்கு ஏற்ற சொற்களையும், தொடர்களையும் தேர்ந்தெடுந்து இந்த நூற்பாவை வடிவமைத்தார் என்று தாம் உடனிருந்து கண்டும் கேட்டும் கலந்துரையாடியும் அறிந்தவர் போலப் பல்வேறு கருத்துக்களை மயிலைநாதரும், சங்கரசமச்சிவாயரும் நயவுரையில் விரிவாக எழுதியுள்ளர். சங்கர நமச்சிவாயர் பவணந்தி முனிவருடைய அடிச்சுவட்டின் தடயத்தைச் சரியாகக் கண்டறிந்தவர். அதனால் அவர் வரைந்த நயவுரைகள் காலத்தை வென்று பெருவாழ்வு பெற்றுவிட்டன. இத்தகைய பயன்மிகு நயுவுரைகள் அவர் உரையில ் இருநூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் அமைந்துள்ளன. அவற்றை மனம் தோய்ந்து படித்துப் புரிந்துகொள்வது ஒரு அனுபவம். உரை அனுபவம். இந்த அனுபவம் தனக்கு வாய்த்த காரணத்தால்தான் பதசாரம் எழுதுவதில் இவருக்கு யாரும் இணை இல்லை என்று தண்டபாணி தேசிகர், சங்கரநமச்சிவாயரை நெஞ்சாரப் புகழ்ந்துரைத்தமை பொய்யுரை அல்ல் புகழுரை என்று அ.தாமோதரன் குறிப்பிடுகின்றார். மயிலைநாதரின் நயவுரைத் தன்மை மயிலைநாதர் தன் உரையில் ஓரிரு இடங்களில் மட்டுமே நயவுரை வரைகின்றார். மொழியாய்த் தொடரினும் முன்னனைத் தெழுத்தே எனும் நூற்பாவிற்கு உரை வகுக்குமிடத்து, எழுத்துக்கள் பலவற்றையும் கூட்டி நெருக்கி ஒரு தொடர்படக் கூறுமிடத்தும், தத்தம் வடிவும் அளவும் முதலியன இயல்பில் திரியா தனித்து நின்றார் போலும் யாண்டும். என நயவுரை எழுதுகின்றார். மேலும் முற்றாய்தம் பற்றிய உரையினிடத்து. குற்றெழுத்தின் முன்னர் உயிரொடு கூடிய வல்லெழுத்து ஆறன்மிசையே பெறப்படும். ஆய்தவொற்று என்றவாறு ஆய்தமான புள்ளி ஆய்தப்புள்ளி. ஆய்தப் புள்ளி" என்றார். இதனையும் ஒன்றிற்பாற் சார்த்துதற்கென்க என்றார். இதனையும் ஒன்றிற்பாற் சார்த்துதற்கென்க. ஒற்றேல் உயிரேறப் பெறல் வேண்டுமெனில் சார்பெழுத்தாதலின் உயிரேறப் பெறாதெனக் கொள்க என்று நயமாக உரை கூறிச் செல்கின்றார் மயிலைநாதர். சங்கரநமச்சிவாயரின் நயவுரை பெயரியலில் வேற்றுமை பற்றிய நூற்பாவில் வேற்றுமையின் இயல்பும் தொகையும் குறித்து எழுதியுள் ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப் பொருள் வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை என்ற சூத்திரத்தில் சொற்கள் அனைத்திற்கும் நமச்சிவாயர் வரைந்துள்ள நயவுரை வேற்றுமைகளுக்கு எழுதிய முகவுரை போல அமைந்துள ்ளது. வேற்றுமையின் பொருளமைதிக்கு ஏற்ற சொற்களை ஆசிரியர் தெரிவு செய்து நூற்பா யாத்துள்ளார் என்ற கருத்தைச் சங்கரநமச்சிவாயரின் நயவுரை தோற்றுவிக்கின்றது விளக்கிச் சொல்ல வேண்டாத வகையில் தெள்ளத் தெளிந்த நடையில் எல்லாப் பெயரும் எல்லா வேற்றுமையும் ஏலாது என்பார். ஏற்கும்" ஏ்றும், வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களுள் பெயர்ப்பட்டு நின்றனவும் தழீஇகோடற்கு எவ்வகை என்றும் வினை முதலிய மூன்றும் வேற்றுமை கொள்ளா என்பார்பெயர்" என்றும், ஏற்றும்" எவ்வகைப் பெயர்க்கும ் வேற்றுமை என்னும் காரியத்தைச் செய்யும் கருத்தாவாகிய எட்டு வேற்றுமை உருபிற்கும் வேற்றுமை எனப் பெயர் பெயர்ந்து காரியவாகு பெயராகிய காரணக் குறி என்பார் வேற்றுமை செய்வன எட்டே என்று நயவுரை வரைகிறாா